# சுதந்திரத்திற்கு பின்னரான அரசியலமைப்புகளும் சிறுபான்மையினரின் நிலைமைகளும் (பாகம் - IV)

(சட்டத்தரணி கனக நமநாதன் LL.B )

1970ம் - 1980ம் ஆண்டைய சகாப்தம் இலங்கை மக்களுக்கும் குறிப்பாகத் தமிழ் மக்களுக்கும் கெடுதல் நிறைந்த காலமாக ஒரு மாற்றத்தை ஏற்படுத்திவிட்டிருந்தது. 1971ம் ஆண்டு சே குவாரா வன்முறைத் தாக்குதல்களும், 1972ம் ஆண்டு தமிழ் மக்களுக்குப் பாதுகாப்பாக சோல்பரி அரசியலமைப்பிலிருந்த உரிமைகளை இலதாக்கி பெரும்பான்மையினருக்கு ஏற்ற வகையில் யாப்பை உருவாக்கியமையும், 1973ம் ஆண்டு மழையின்மையும் வரட்சியான காலநிமைமையும், 1974ம் ஆண்டு உலகத் தமிழாராய்ச்சி மகாநாட்டை துன்பகரமாக்கிய நிகழ்வும், 1975ம் ஆண்டு விடுதலைப்புலிகள் மற்றும் ஏனைய இயக்கங்களின் உருவாக்கமும் வன்முறைக் கலாச்சாரத்திற்கு வித்திட்ட ஏதுக்களும், சிங்கள மக்களோடு இணைப்பாட்சி மூலம் இணைந்து வாழ விருப்பம் கொண்டிருந்த தமிழரை 1976ம் ஆண்டு தனிநாடு கேட்க வைத்ததும் அதன் விளைவாக நடைபெற்ற தமிழரசு உறுப்பினர்களுக்கு எதிரான ட்ரயல் அட்பார் தீர்ப்பாய விசாரணையும் இந்தச் சகாப்தத்தில் இடம்பெற்ற வேண்டா நிகழ்வுகளே.

**தனி ஈழக் கோரிக்கை**

தமிழரசுக் கட்சி தனது இலட்சியமாக் கொண்டிருந்த வடக்கு கிழக்கு இணைந்த தாயகத்தில் இணைப்பாட்சி என்பதிலிருந்து விலகி வடகீழ் இணைந்த தாயகத்தில் தனியாட்சி என்ற நிலைப்பாட்டுக்கு மாறியதற்கான காரணங்கள் வட்டுக்கோட்டைப் பிரகடனத்தில் கூறப்பட்டுள்ளது. தமிழரசுக் கட்சி தமிழ் காங்கிரஸ் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஆகிய கட்சிகள் ஒன்றிணைந்து உருவாக்கிய தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி 1976ம் ஆண்டு மே மாதம் 14ந் திகதி பன்னாகம் என்ற இடத்திலிருந்து சரித்திரம் வாய்ந்த பிரகடனத்தை வெளியிட்டது. அவற்றில் முக்கியமாகக் கூறப்பட்டு இருந்தவையாவன:

தமிழருக்கு என்று தனி இராஜ்ஜியம் ஒன்று இருந்தது. அது 1619ம் ஆண்டு போர்த்துக்கேயரால் கைப்பட்டதென்றும் இருந்தாலும் அது தொடர்ந்து ஒல்லாந்தருக்குக் கீழும் பின் பிரிட்டிஸாருக்குக் கீழும் தனியாட்சியாகவே செயற்பட்டு வந்ததென்றும் 1833ம் ஆண்டிலேயே பிரிட்டிஸ் ஆட்சியில் கூல்புறுக் ஆணைக்குழுவின் சிபாரிசின் மூலம் சிங்கள தேசத்துடன் நிர்வாக சௌகரிய வசதி (Administrative convenience ) என்ற காரணம் காட்டி இணைக்கப்பட்டு ஒரே நிர்வாகத்தின் கீழ் கொண்டுவரப்பட்டது என்றும்:

அன்றிருந்த யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸ் ஹண்டி பேரின்பநாயகம் தமிழ் தலைவர்களான சேர்.பொன். இராமநாதன் சேர்.பொன்.அருணாச்சலம் கே.நடேச ஐயர் போன்ற தமிழ்த் தலைவர்கள் சிங்களத் தலைவர்களுடன் தோள் கொடுத்து நாட்டின் சுதந்திரத்திற்காக போராடியிருந்தார்கள் என்றும்: முன்னரான காலத்தில் தமிழர்

பிரச்சனையைத் தீர்க்க சுதந்திரக் கட்சியினால் முன்வைக்கப்பட்ட பண்டாரநாயக்கா – செல்வநாயகம் உடன்படிக்கையையோ (1957) அதன்பின் ஐக்கிய தேசியக் கட்சியினால் முன்வைக்கப்பட்ட டட்லி – செல்வா உடன்படிக்கையையோ (1965) பற்றிக் கருத்திற்கெடுக்காது அவற்றின் அடிப்படையில் தீர்வொன்றைச் சிந்திக்காது தமிழ்க் கட்சியினது பங்களிப்பு இல்லாது தமது இஷ்டப்படி ஒற்றையாட்சியை அரசியலமைப்பினூடாக திணித்துவிட்டார்கள் என்றும்: தமிழ் மக்களை அடக்கி ஒடுக்கி அடிமையாக்கும் எண்ணத்தில் மேற்கொள்ளப்பட்ட கலவரங்களாக 1956ல் கொழும்பிலும் அம்பாரையிலும் இடம்பெற்ற இனக்கலவரம் பின்னர் 1958ல் நாடு முழுவதிலும் இடம்பெற்ற இனக்கலவரம் 1961ல் வட-கிழக்கில் படையினரின் பயங்கரவாதச் செயற்பாடு 1974ல் உலகத் தமிழாராய்ச்சி மகாநாட்டுத் துயரச்சம்பவம் 1976ல் புத்தளத்தில் இடம்பெற்ற முஸ்லீம்களுக்கு எதிரான வன்முறைகள் என பட்டியலிட்டு இனியும் இணைந்து வாழக்கூடிய நம்பிக்கை இல்லாததின் காரணமாகவே தனிநாட்டுக் கோரிக்கையை முன்வைப்பதாக வெளியிட்டிருந்தார்கள்.

**தமிழ்த் தேச மக்கள் என்ற உணர்வு**

சிங்கள அரசினால் மேற்கொள்ளப்பட்ட திட்டமிட்ட

1.சிங்களக் குடியேற்றங்களால் தமிழ்ப் பிரதேசங்களின் எல்லைகளை ஆக்கிரமித்தது
2. சிங்களம் மட்டும் சட்டம் கொணர்ந்து தமிழ் மொழியை இல்லாதாக்கியது
3. தமிழ் மக்களின் ஒரு சாராரின் பிரஜாவுரிமையை இல்லாதாக்கியது
4. தமிழர் வாழ்க்கையில் பொருளாதார முன்னேற்றம் அடைய வாய்ப்பில்லாமை
5. வேலை வாய்ப்பு வசதிகளில் சந்தர்ப்பம் கொடுக்காமை
6. கல்வி கற்பதில் தரப்படுத்தல் மூலம் உயர்கல்வி வாய்ப்பை இழந்தமை ஆகிய இவ்வாறான செயற்பாடுகளினால் தமிழ் மக்களை அடிமைகளாக்கி அவர்களிடையே இருந்த தமிழ்த் தேச மக்கள் என்ற மொழியின் மூலமாகவும் சரித்திர பூர்வமாகவும் பிணைக்கப்பட்டிருந்து கூடி வாழும் இனம் என்ற உணர்வு மழுங்கடிக்கப்படுகிறது. இதனாலேயே சுதந்திரமானதும் இறைமை கொண்டதும் மதச்சார்பற்றதுமான சோஸலிச தமிழ் ஈழம் என்ற ஒரு நாடு உருவாக்கப்படும் எனக் கூறப்பட்டுள்ளது. அவ்வாறான ஒரு நாட்டின் உருவாக்கம் மூலமாகவே தமிழர்கள் தமது இருப்பையும் பொருளாதாரத்தையும் மொழியையும் கலை கலாச்சார பண்பாடுகளையும் காக்கவும் விருத்திசெய்யவும் முடியும் என்ற நிலைப்பாடு அந்தக் காலகட்டத்தில் தமிழர் அரசியலில் தோன்றும் சூழ்நிலையிருந்தது.

**ட்ரயல் அட்பார் ( Trial at Bar ) தீர்ப்பாயம் விசாரணை**

தனி நாட்டுப் பிரேரணை கொண்ட வெளியீட்டை மக்களுக்கு வினியோகித்தார்கள் என்ற தேச துரோக செயல் (Sedition) குற்றச்சாட்டு மூலம் குற்றவியல் வழக்கு பாராளுமன்ற உறுப்பினர்களாக இருந்த அ. அமிர்தலிங்கம் எம். சிவசிதம்பரம் கே.பி.இரத்தினம் கே. துரைரட்னம் ஆகியவர்களுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டு தீர்ப்பாய விசாரணை நடைபெற்றது. இந்த வழக்கில் மூன்று பிரபல்யமான இராணி வழக்குரைஞர்கள் எதிரிகள் சார்பாக ஆஜராகி வாதாடியிருந்தார்கள். அவர்கள் எம்.திருச்செல்வம் ஜி.ஜி. பொன்னம்பலம் எஸ்.ஜே.வி. செல்வநாயகம் ஆகியோர்கள்.

இலங்கைத் தமிழர்களின் பண்டைக்கால மன்னர் ஆட்சி அதிகாரங்கள் பண்பாடுகள் கலை கலாச்சார விழுமியங்கள் பற்றியெல்லாம் இத்தீர்ப்பாய விசாரணையில் எடுத்துப் பேசப்பட்டதாக கூறப்பட்டுள்ளது. ஈற்றில் வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டு எதிரிகளாக்கப்பட்ட நால்வரும் விடுதலையானார்கள்.

**1978ம் ஆண்டைய அரசியலமைப்பு**

1977ம் ஆண்டு ஆடி மாதம் 27ந் திகதி பொதுத் தேர்தல் நடைபெற்றது. அதில் ஐக்கிய தேசியக் கட்சி மாபெரும் வெற்றியை ஈட்டியது. தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி 18 உறுப்பினர்களைக் கொண்டு இரண்டாவது பெரிய கட்சியாக விளங்கியது. அக்கட்சியின் தலைவர் அ. அமிர்தலிங்கம் எதிர்க்கட்சித் தலைவர் பதவியில் அமர்த்தப்பட்டார். 4/5 க்கும் கூடுதலான பெரும்பான்மை கொண்டிருந்த ஐக்கிய தேசியக் கட்சி புதிய அரசியலமைப்பை உருவாக்கும் எண்ணத்தில் அரசியலமைப்பு நிர்ணய சபையை அமைத்தது.

**நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி**

பிரான்ஸ் மற்றும் அமெரிக்காவில் நடைமுறையிலுள்ள ஜனாதிபதிப் பதவியின் அதிகாரங்களை ஆராய்ந்து இரண்டிலிருந்தும் தெரிந்தெடுத்த ஒரு கலப்புத் தன்மை கொண்ட அரசியலமைப்பே 17வது 19வது. திருத்தச் சட்டம் இயற்றப்படும்வரை இங்கு நடைமுறையிலிருந்த நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிப் பதவியைக் கொண்ட அரசியலமைப்பாகும். ஒற்றையாட்சி பௌத்த மதம் ஆகியவை பற்றி இரண்டு அரசியலமைப்பும் ஒரே கருத்தையே கொண்டுள்ளன. பிற மதங்களைப் பின்பற்றுவது பற்றி இரண்டு யாப்புமே அடிப்படை உரிமைகள் என்ற பிறிதொரு அத்தியாயத்தில் சுதந்திரத்தைக் கொடுத்துள்ளன. ஜனாதிபதி பதவியைப் பொறுத்தளவில் பல வேறுபாடுகள் காணப்படுகின்றன. முன்னையதில் பிரதமரின் சிபாரிசின் மீதுதான் ஜனாதிபதி தெரிவாவார். பின்னையதில் மக்களால் தேர்தல் மூலம் நேரடியாக தெரிவு செய்யப்படுவார்.முன்னையவர் நாட்டின் தலைவராக மட்டும் இருப்பார். சுதந்திரமாக செயற்பட வேண்டிய ஆணைக்குழுக்கள், உயர் அரசுப் பதவிகள், உயரிய நீதிமன்ற நீதியரசர்கள் நியமனம் ஆகியவைகள் பிரதம அமைச்சரின் ஆலோசனையின் மீதே நியமிப்பார். பின்னையவர் நாட்டின் தலைவராகவும் நிறைவேற்றுத்துறையின் தலைவராகவும் இருப்பார். அத்துடன் அமைச்சுப் பொறுப்புக்களையும் ஏற்கலாம். பாராளுமன்ற அமர்விலும் பங்குபற்றலாம். அதனால் மேற்கூறப்பட்ட நியமனங்கள் யாவையும் தன்னிஸ்டமாக செய்யலாம். பிரதம அமைச்சரையும் நியமிக்கும் அதிகாரமும் இருந்தது. இவை 19வது திருத்தச் சட்டத்திற்கு பின்னரே மாற்றமடைந்தன.

**விரைவு நடவடிக்கை**

ஐக்கிய தேசியக் கட்சி தலைவர் ஜே.ஆர். ஜெயவர்தனா இந்த நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி முறைமை இலங்கைக்கு ஏற்றது என அரசியலமைப்பில் உள்வாங்கியதற்கு பல சிறந்த காரணங்களுண்டு. சிங்கப்பூர் போன்று நாடு துரித அபிவிருத்தி ஆகாததற்கு முக்கிய காரணம் ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை ஆட்சி மாற்றம் ஏற்பட்டு வந்தமையாகும். எந்தவொரு அரசும் அபிவிருத்தி திட்டங்களைத் தனது ஆட்சிக்காலத்தில் முழுமையாக அமுல்படுத்த முடியாததினால் அந்த அரசு

செல்வாக்கை இழந்து அடுத்த தேர்தலில் தோல்வியடையும். இதற்கு பிரதான காரணமாக இருந்தது துரித செயற்பாடற்ற பாராளுமன்ற நடபடி முறைமைகளே. அரசு திட்டங்களை பாராளுமன்றில் முன்வைக்கும்போது அது நல்லதோ கெட்டதோ என்று பாராது எதிர்கட்சியினர் எதிர்ப்பார்கள் அல்லது பிழை கண்டு பிடிப்பார்கள். அதை அனுமதிக்க வைக்க சில மாதங்களாகும். ஒரு ஆட்சியில் ஆரம்பிக்கும் அபிவிருத்தித் திட்டங்கள் அடுத்த ஆட்சியிலேதான் முழுமைபெற சாத்தியமாகும். அத்துடன் அதை நிறைவேற்றும் கீழ்மட்ட அரச அதிகாரிகளின் களவு கவனயீனம் அசமந்த போக்கு திட்டத்தின் நோக்கத்தையே சிதைத்துவிடும். நிறைவேற்று அதிகாரம் படைத்த ஜனாதிபதி நேரடியாக கண்காணித்து விரைவுபடுத்தலாம் வீண் விரயம் ஊழல்களை தடுக்கலாம். இந்த அதிரடிக் கண்காணிப்புகள் பரிசோதனைகள் விரைவுபடுத்துதல்கள் ரணசிங்க பிரேமதாசாவின் ஜனாதிபதி ஆட்சிக் காலத்தில் சிறப்புற நடைபெற்றுவந்தது.

(தொடரும்)